| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **89/2018** |
| தேதி | : | **24.02.2026.** |
| பெயர் | : | **பாஸ்கரன் த/பெ பழனி படையாட்சி** |

**வா.த.சா.1 (PW1) மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**
**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது**. )**

**<u>வா.த.சா.1. (PW1) - குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1) 13.05.2017 ம் தேதி 1.5 Ton AC எனது வீட்டிற்கு Artic Business Corporation என்ற நிறுவனத்தால் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனத்தின் விற்பனையாளர் 99 chills vendor ஆகும். 99 chills நிறுவனம் தான் மேற்சொன்ன AC யை Artic Business Corporation என்ற நிறுவனத்திற்கு விற்பனை செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 99 chills நிறுவனத்தின் MD எனக்கு தெரியும். மேற்சொன்ன MD எனக்கு தனிப்பட்ட முறையில் மின்னஞ்சல் வழியாக AC யை கொடுத்ததாக செய்தி அனுப்பியுள்ளார் என்றால் இல்லை.

2) எனது துறையின் மூலமாக தான் மேற்சொன்ன விற்பனையாளரின் கொட்டேசன் நிர்வாகத்திற்கு அனுப்பப்படும் என்றால் சரியல்ல. 2016 ம் வருடம் என்னுடைய பரிந்துரையின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி நிறுவனம் மேற்சொன்ன 99 chills நிறுவனம் மூலம் 6 DIAKIA tower AC வாங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன AC வாங்கப்பட்டது குழுவில் எடுக்கப்பட்ட முடிவின் மூலம் தான் வாங்கப்பட்டது. 99 chills நிறுவனத்தின் கொட்டேசனை நான் முடிவு செய்யவில்லை.

3) 2015 ம் ஆண்டு வாங்கப்பட்ட AC க்கு உண்டான விலையை விட 2016 ம் ஆண்டு வாங்கப்பட்ட AC க்கு ரூபாய் 68000 கூடுதலாக செலவிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 99 chills நிறுவனம் கொடுத்த கொட்டேசனை விட டெக்னோ கிராக்கர் நிறுவனம் கொடுத்த கொட்டேசன் குறைவாக தான் இருந்தது என்றால் சரியல்ல. எந்த ஒரு பொருளையும் நிறுவனம் வாங்கும்போது கொட்டேசன் கொடுக்கப்பட்ட அனைத்து விவரங்களிடம் நிறுவனத்திடம் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். குறைவாக விலைக்கு கொடுக்கப்பட்ட நிறுவனத்தின் தகவலை நான் குழுவிடம் மறைத்திருந்தேன் என்றால் நான் அவ்வாறு எந்த

தகவலையும் மறைக்கவில்லை. மேற்சொன்ன 99 chills நிறுவனத்தில் உள்ள ஊழியரிடம் எனக்கு தனிப்பட்ட முறையில் எனக்கு பழக்க வழக்கம் இருந்தது என்றால் சரியல்ல.

4) 99 chills நிறுவனத்திடம் இருந்து வாங்கிய ஏசி விலை அதிகமாக இருந்ததால் 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு இழப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன இழப்பு ஏற்பட்டதற்கு நான் எந்தவகையிலும் பொறுப்பு அல்ல. 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு சிவசக்தி என்டர்பிரைசிஸ் விற்பனையாளர்கள் இருக்கின்ற விவரம் எனக்கு தெரியும். 16.02.2017 ம் தேதி எனது துறையின் மூலமாக சிவசக்தி என்டர்பிரைசிஸ் நிறுவனத்திற்கு பொருட்கள் வாங்கும் உத்தரவு எதுவும் செல்லவில்லை. சிவசக்தி என்டர்பிரைசிஸ் நிறுவனத்தை என்னால் பரிந்துரைக்கப்படவில்லை.

5) மேற்சொன்ன பொருட்கள் வாங்கும் உத்தரவு என்னால் தரப்படவில்லை அதனால் அவர்கள் ஏற்படுத்திய இழப்பிற்கு நான் எந்தவகையிலும் பொறுப்பு அல்ல. மேற்சொன்ன சிவசக்தி என்டர்பிரைசிஸ் நிறுவனம் 1ம் பிரதிவாதி நிறுவனம் விசாரணை குழு முன்பாக அவர்கள் தெரிவித்த விவரங்கள் எனக்கு தெரியாது. மேற்சொன்ன குழுவின் முன்பாக தெரிவித்த விவரங்கள் எனக்கு தெரியாத காரணத்தினால் அதன் தொடர்பாக எந்த இழப்பிற்கும் நான் காரணம் அல்ல. அவர்கள் கொடுத்த வாக்குமூலம் என்னை 1ம் பிரதிவாதி நிறுவனம் என்னை வேலையில் இருந்து நீக்கியதற்கு அடிப்படை காரணம் என்றால் அது தவறு.

6) சிவசக்தி என்டர்பிரைசிஸ் நிறுவனம் கொடுத்த எந்தவித கொட்டேசன் சம்பந்தமாகவும் எனக்கு தெரியாது. சிவசக்தி என்டர்பிரைசிஸ் நிறுவனம் அவர்கள் ஏற்படுத்திய இழப்பிற்கு நான் பொறுப்பு அல்ல. சிவசக்தி என்டர்பிரைசிஸ் நிறுவனம் கொடுத்த கொட்டேசன் விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. சிவசக்தி என்டர்பிரைசிஸ் நிறுவனம் ஏற்படுத்திய 4 லட்சம் ரூபாய் இழப்பிற்கு நான் பொறுப்பல்ல. சிவசக்தி என்டர்பிரைசிஸ் நிறுவனம் சம்பந்தமான எந்தஒரு பொருளுக்கான பரிந்துரையும் என்னால் ஏற்படுத்தப்படவில்லை. நான் விற்பனையாளர்களின் பரிந்துரைகளை 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு இழப்பு ஏற்படுத்தும் நோக்கத்தோடு நான் எந்த தகவலையும் மறைக்கவில்லை.

7) நான் 1ம் பிரதிவாதி நிறுவனத்தில் வகித்த பொறுப்பில் மேற்சொன்ன பரிந்துரைகள் சம்பந்தமாக அனைத்து விவரங்களையும் நிறுவனத்திடம் தெரிவிக்கும் பொறுப்பு என்னிடம் இருந்தது என்றால் என்னிடம் இருந்தது. மேற்சொன்ன விற்பனையாளர்கள்

அனைவரும் ஏற்கனவே 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு பொருட்களை விற்பனை செய்தவர்கள் தான். வீரா எலக்டிரிகல்ஸ் நிறுவனம் எனக்கு தெரியும். என்னை பணியில் நீக்குவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக வீரா எலக்டிரிகல்ஸ் நிறுவனம் மூலமாக 1ம் பிரதிவாதி நிறுவனம் மூலமாக பொருட்களை விற்பனை செய்வது சம்பந்தமாக நான் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றால் இல்லை.

8) எனக்கு 1ம் பிரதிவாதி நிறுவனத்தால் மடிக்கணிணி வழங்கப்பட்டது. என்னிடம் இருந்த மடிக்கணிணி மற்றும் எனக்கு உதவியாளராக இருந்த இளங்கோ என்பரின் மடிக்கணிணி கைப்பற்றப்பட்டு அதில் உள்ள விவரங்களின் படி வீரா எலக்டிரிகல்ஸ் நிறுவனத்திற்கு ஏற்படுத்திய ஒப்பந்தத்தில் 15 முதல் 20 சதவீதம் வரை எனக்கு சலுகை கிடைத்தது என்றால் சரியல்ல. என்னுடைய மடிக்கணிணி என்னை பணிஇடை நீக்கம் செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக நானே 1ம் பிரதிவாதி நிறுவனத்திடம் கொடுத்துவிட்டேன்.

9) மேற்சொன்ன வீரா எலக்டிரிகல்ஸ் நிறுவனம் மூலமாக 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு ரூபாய் 16 இலட்சம் இழப்பீடு ஏற்பட்டதற்கு நான் பொறுப்பல்ல. நான் எந்த ஒரு நிறுவனத்திற்கும் பொருட்கள் விற்பனை செய்வதற்கான பரிந்துரை செய்யவில்லை. எனக்கு 20 சதவீதம் லாபம் அடையும் நோக்கத்தோடு எந்த ஒரு ஒப்பந்தமும் ஏற்படுத்தவில்லை. மேற்சொன்ன வீரா எலக்டிரிகல்ஸ் நிறுவனம் 1ம் பிரதிவாதியின் விசாரணை குழுவின் முன்பாக ஆஜராகி எனக்கு எதிராக கொடுத்த வாக்குமூலம் பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன வீரா எலக்டிரிகல்ஸ் நிறுவனம் தான் என்னுடைய வீட்டிற்கான மின்கட்டணத்தை செலுத்திவந்தார் என்றால் சரியல்ல.

10) மேற்சொன்ன வீரா எலக்டிரிகல்ஸ் நிறுவனம் என்னுடைய வீட்டிற்கு தேவையான மின்சாதன பொருட்கள் அனைத்தையும் கொடுத்தார் என்ற வாக்குமூலத்தை பற்றி எனக்கு தெரியாது. வீரா எலக்டிரிகல்ஸ் நிறுவனம் என்னுடைய வீட்டிற்கு மின் இணைப்பிற்கான கட்டணம் எதுவும் செலுத்தவில்லை. நான் எனது கண்ணிற்கு நுங்கம்பாக்கத்தில் உள்ள சங்கசநேத்திராலய மருத்துவமணையில் கண் அறுவவை சிகிச்சை செய்துகொண்டேன். மேற்சொன்ன வீரா எலக்டிரிகல்ஸ் நிறுவனம் தான் அந்த அறுவை சிகிச்சைக்கான தொகையை செலுத்தினார்கள் என்றால் தவறு. அவர்கள் செலுத்தவில்லை. அவ்வாறு அவர்கள் கொடுத்த வாக்குமூலம் பற்றி எனக்கு தெரியாது.

11) என்னுடைய மடிக்கணிணியை பிரதிவாதி நிறுவனம் தனிக்கை செய்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் தனிக்கை செய்யும் போது அதில் சட்டத்திற்கு புறம்பான புகைப்படங்கள் இருந்ததாக அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி நிறுவனம் எனக்கு அளித்த மடிக்கணிணியில் நான் ஆபாச புகைப்படங்கள் எதுவும் சேமித்து வைக்கவில்லை. அவர்கள் அவ்வாறு சொல்வது தவறு. பிரதிவாதி நிறுவனம் எனக்கு அளித்த அழைப்பேசியில் இருந்து என்னுடைய தனிப்பட்ட அழைப்பேசிக்கு சட்டத்திற்கு புறம்பான விவரங்கள் பகிரப்பட்டுள்ளது என்றால் கிடையாது. மேற்சொன்ன விவரங்கள் பற்றி நான் நிறுவனத்தின் விசாரணை அறிக்கை குழு முன்பாக அதைப்பற்றிய தகவலை தெரிவித்தேனா என்றால் இல்லை.

12) மேற்சொன்ன செயல்களால் நான் பிரதிவாதி நிறுவனத்திற்கு தகுதியில்லா ஊழியராக இருந்திருக்கிறேன் என்றால் சரியல்ல. மேன்டர்டூல்ஸ் நிறுவனத்தை பற்றி எனக்கு தெரியாது. மேன்டர்டூல்ஸ் நிறுவனத்தில் நான் கூட்டாளியாக எதுவும் இல்லை. மேற்சொன்ன நிறுவனத்தை பற்றிய தகவல்களை நான் பிரதிவாதி நிறுவனத்திடம் எதுவும் தெரிவிக்கவில்லை ஏன்என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேன்டர்டூல்ஸ் நிறுவனம் பற்றிய தகவல்களை நான் பிரதிவாதி நிறுவனத்தின் சட்டத்திற்கு எதிராக மறைத்த காரணத்தினால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

13) Brakes India நிறுவனம் பிரதிவாதி நிறுவனத்தின் சந்தையில் போட்டியாளராக இருந்து வருகிறார். பிரதிவாதி நிறுவனத்தின் போட்டியாளர்கள் யார் யார் என்ற விவரம் எனக்கு தெரியும். மேன்டர்டூல்ஸ் நிறுவனம் மற்றும் Brakes India நிறுவனம் தொழில் முறையில் ஒன்றாக செயல்பட்டுவருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேன்டர்டூல்ஸ் நிறுவனத்தின் கணக்கு வழக்குகள் தொடர்ந்து என்னுடைய மின்னஞ்சலுக்கு செய்திகளாக வந்திருக்கிறது என்றால் அது ஒரு Spam மெயில் ஆகும். மேற்சொன்ன Spam மெயில் சம்பந்தமான நான் எந்த ஒரு புகாரும் கொடுக்கவில்லை.

14) நான் மேன்டர்டூல்ஸ் நிறுவனத்துடன் தொடர்பில் இருந்ததால் தான் அந்த நிறுவனத்தின் மின்னஞ்சல்கள் என்னுடைய மின்னஞ்சலுக்கு செய்தி வந்தது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி நிறுவனத்திற்கு என்னுடைய வங்கி கணக்கு பரிவர்த்தனைகளை சமர்பித்தேனா என்றால் இல்லை. மேற்சொன்ன இழப்பிற்கு நான் தான் பொறுப்பு என்றாலும்,

நான் எனது வேலையை தொடர்வதற்கான வயது மூப்பு அடைந்துவிட்டகாரணத்தினாலும் நான் கோரிய எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும், செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

15) நான் பிரதிவாதி நிறுவனத்தில் பணியாற்ற சட்டத்திற்கு தேவையான வயது கடந்துவிட்டது என்றால் சரியல்ல. அரசாங்கம் கூறிய வயதில் தான் இருக்கிறேன் எனவே நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கவேண்டும். பிரதிவாதி நிறுவனத்திற்கு இழப்பு ஏற்படுத்தியதாலும் அவர்கள் பெயருக்கு கலங்கம் ஏற்படுத்திய காரணத்தினாலும் நான் எனது பணியை தொடர எனக்கு எவ்வித தகுதியும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம் **: Sd/.** பாஸ்கரன்**.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.